

பாராளுமன்ற தேர்தல் 2024 - தூத்துக்குடி தொகுதியில்

தூத்துக்குடி மாவட்டம், உமரிக்காடு கிராமத்தை சேர்ந்த

# ஜெ.சிவனேஸ்வரன்

**B.E, M.Tech (NIT Calicut), MBA (IIM kozhikode)**

# பலூன் சின்னத்தில்

சுயேச்சை வேட்பாளராக 3-வது முறையாக போட்டியிடுகிறேன்

**நீங்கள் நினைப்பீர்கள் சுயேட்சை வேட்பாளர் என்ன செய்ய முடியும் ?**
**ஒரு சுயேட்சை வேட்பாளரால் என்ன இலவசம் கொடுத்திட முடியும் ?**
**தேர்தல் வந்தால் என்ன இலவச திட்டம் என ஏங்கும் மனதுக்கு கவலை வேண்டாம் - இதோ அனைத்து வயதினரையும் மகிழவிக்கும்படி எனது வாக்குறுதிகள்.......**

**1.** பள்ளி மாணவர்களுக்கு **Rs.50,000** மதிப்புள்ள மொபைல் போன் இலவசம்

**2.** அனைத்து கல்லூரி மாணவர்களுக்கும், **Rs.1,00,000** மதிப்புள்ள இருசக்கர வாகனம் இலவசம்

**3.** அனைத்து இல்லத்தரசிகள் நலனுக்காக, மாதம் ஒரு**(1)** சமையல் சிலிண்டர் இலவசம்

**4.** ஆண்கள் மற்றும் வியாபாரிகளின் தொழில் சார்ந்த போக்குவரத்துக்கு அரசு பேருந்து, ரயில் மற்றும் விமானத்தில் (அரசு) பயணிக்க இலவசம்

**5. 60** வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் அனைவருக்கும் மாதம் **Rs.5000**

**என்னடா வாக்குறுதி நம்புற மாதிரியா இருக்குதுனு நினைக்கீறீங்களா ?**
**நீங்கள் இலவசம் வாங்கி பழகிட்டிங்க... ஏதோ என்னால முடிஞ்சது**
**ஏன் ஒரு சுயேட்ச்சை வேட்பாளர் சொன்னால் நம்பமாட்டீர்களா?**



ஜெ.சிவனேஸ்வரனுக்கு பலூன் சின்னத்தில் வாக்களியுங்கள்

# ஜெ.சிவனேஸ்வரன்

B.E, M.Tech (NIT Calicut), MBA (IIM kozhikode)

**வாக்கு வரிசை என் 18 | 2-வது வாக்கு மெஷினில் | 2-வது பட்டன்**

## முதல் பக்கத்தில் உள்ள வாக்குறுதிகள் நிறைவேற்ற சில நிபந்தனைகள்

- மொபைல் போன் இலவசமாக பெற - **12**-ஆம் வகுப்பு முடித்த பள்ளி மாணவர்கள் **6**-ஆம் வகுப்பில் இருந்து **12**-ஆம் வகுப்பு வரை **1st Rank** எடுத்து இருக்க வேண்டும் அதுவும் அரசு பள்ளியில் படித்து இருக்க வேண்டும்.

- கல்லூரி மாணவர்கள் இருசக்கர வாகனம் இலவசமாக பெற - மாணவர்கள் தொடர்ந்து அனைத்து செமஸ்டர் தேர்விலும் முதல் மதிப்பெண் எடுத்து இருக்க வேண்டும். அதுவும் அரசு பள்ளியில் படித்து இருக்க வேண்டும். கடைசி வருடம் இருசக்கர வாகனம் பரிசளிக்கப்படும்

- இலவச சிலிண்டர் தகுதி பெற - வீட்டில் ஒருவர் மட்டுமே இருக்க வேண்டும், அவருக்கும் **90** வயதுக்கு மேல் இருக்க வேண்டும்.

- ஆண்கள் மற்றும் வியாபாரிகள் தொழில் சார்ந்த இலவச போக்குவரத்துக்கு - நேரம் இரவு **12** மணி முதல் காலை **2** மணி வரை செல்லுபடியாகும் (தூத்துக்குடி மாவட்டத்திற்குள் மட்டும் பொருத்தும்)

- **60** வயதுக்கு மேல் உள்ளோர் மாதம் **Rs.5000** பெற - கூட்டு குடும்பம் மகன், மருமகள், பேரன் பேத்தியுடன், ஒரே குடும்பமாக ஒரே வீட்டில் வாழ வேண்டும்

**இந்த இலவசத்தால் அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடி ஏற்படின், அதை ஈடு செய்ய அத்தியாவசியமான, சிலிண்டர், பெட்ரோல், போக்குவரத்து மற்றும் பால் கட்டணம் உயர்த்தப்படும்**

**இப்போ எப்படி இது சாத்தியம் தானே ?**

**இலவசம் இலவசம் என்று ஏமாந்தது போதும் ....**
**இனிமேல் விழித்து கொள்ளுங்கள் ....**
**இலவசம் என்ற வார்த்தையின் மறுவடிவம் ஏமாற்றம்.**
**ஒரு போதும் இலவசத்தால் உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்த முடியாது**
**இலவசத்தால் உங்களை நீங்கள் இழந்து விடாதீர்......**
**யாருக்கும் அடிமை ஆகிவிடாதீர்.....**
**உங்கள் வாக்கை யாரிடமமும் விற்று விடாதீர்..**
**தலை நிமிர்ந்து நிற்போம் .....100% அனைவரும் வாக்குஅளிப்போம். ..**
**புது மாற்றத்தை உருவாக்குவோம்**

## இனி எனது வாக்குறுதிகள் உங்களுக்காக

- தினமும் காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை உங்களில் ஒருவனாக, நான் M.P யாக வாங்கும் சம்பளத்திற்கு, தினமும் மக்களின் பிரச்சனைகளுக்காக களத்தில் உழைத்திடுவேன். உங்கள் பிரச்சனைகள் அறிந்திட உங்களுடன் தினமும் பயணிப்பேன்.

- மாதம் ஒரு முறை மக்கள் கூட்டம் நடத்தப்படும், மக்களின் குறைகள் அறிந்து, அதை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து டெண்டர் மற்றும் காண்ட்ராக்ட், மக்கள் அனைவரும் வெளிப்படையாக அறிந்திட திறந்தவெளி டெண்டர்களாக இருக்கும்.

- ஓர் சுயேட்சையாக, எனது கல்வி திறனையும், ஆளுமை திறனையும் முன் வைத்து மக்களுக்கு அரசின் அனைத்து சலுகைகளும், கல்வி, மருத்துவம் மற்றும் தொழில் சார்ந்த அனைத்து திட்டங்களும் முறையாக அனைத்து தரப்பு மக்களிடமும் முழுமையாக சென்று அடைய அயராது உழைப்பேன்.

**மேற்குறிப்பிட்டபடி நல்லொழுக்கதுடன் செயல்பட்டு கீழ்காணும் அனைத்து பிரச்சனைகளையும் படிப்படியாக சரி செய்வேன்**

1. அரசு பள்ளிகள் மற்றும் அரசு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்.

2. வேலை இல்லாத இளைஞர்களுக்கு, வேலை வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்படும் மற்றும் சுய தொழில் செய்ய ஊக்குவிக்கப்படும்

3. விவசாயம், விவசாயிகள் பாதுகாக்கப்படுவர், விவசாயம் சார்ந்த அனைத்து பிரச்சனைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும்.

4. கனிம வளங்கள் திருட்டு தடுக்கப்பட்டு, இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படும்

5. மழை நீர் வடிகால் பிரச்சனை தீர்த்து வைக்கப்படும்

6. ஏரி, குளங்கள் போன்ற அனைத்து நீர்நிலைகள் தூர் வாரப்பட்டு தொடர்ந்து பாதுகாக்கப்படும்

7. ஆற்றங்கரை ஒர கிராமங்கள் வெள்ள தடுப்பு சுவர்கள் புதிப்பிக்கப்படும்

8. மீனவர்கள் நலம் காக்கப்படும், முக்கிய தேவைகள் பூர்த்தி செய்யப்படும்

9. வியாபாரிகள் மற்றும் தொழில் முனைவோர் பிரச்சனைகள் தீர்க்கப்படும்

10. தூத்துக்குடி மாவட்டத்தில் ரயில் போக்குவரத்து அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்,

11. தூத்துக்குடி வெள்ளத்தின் பின் பழுதான அனைத்து சாலைகளும் விரைவில் சரி செய்துதரப்படும்

12. தூத்துக்குடியில் பெரிய IT பார்க் நிறுவ போதிய வழிவகை செய்யப்படும் , தென் தமிழகத்தில் தூத்துக்குடியை ஒரு சிலிக்கான் VALLEY போல் தரம் உயர்த்தப்படும்

தூத்துக்குடியில் சுயேட்சையாக போட்டியிடும் நான், ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்தை சார்ந்தவன். இந்த தேர்தலில் ஒரு மாற்றம் வரும் என நம்பும் உங்கள் நம்பிக்கைக்கு, உங்களின் உரிமை காக்க, தொகுதி தேவைகளை பாராளுமன்றத்தில் வாதிட்டு பெற்று தருவதற்காக மீண்டும் 3வது முறையாக பலூன் சின்னத்தில் சுயேட்சையாக போட்டியிடுகிறேன்.

**சுயேட்சை வெற்றி பெற முடியாது, ஜெயிக்கிற கட்சிக்கு ஓட்டு போடுவோம் என்ற உங்கள் சிந்தனைகளை மாற்றுங்கள்**



**ஜெ.சிவனேஸ்வரனுக்கு பலூன் சின்னத்தில் வாக்களியுங்கள்**

இந்த முறை உங்கள் பொன்னான வாக்குகளை பலூன் சின்னத்தில் வாக்கு அளியுங்கள். நமது சின்னத்தின், வாக்கு வரிசை என் 18-ஆகவும், இரண்டாவது (2வது) வாக்கு மெஷினில், இரண்டாவது (2வது) பட்டன் ஆகவும் உள்ளது.

**தூத்துக்குடி தமிழகத்தில் ஒரு சிறந்த நகரமாக திகழ அனைத்து முயற்சியும் எடுப்பேன் என உறுதி மொழி அளிக்கிறேன்**

**உங்கள் நண்பர்களுக்குள் இதை whatsapp மூலம் அனுப்பி எனக்கு ஆதரவு அளிப்பீர்.**
**என்னை போல் சுயேட்சைக்கு நீங்கள் அளிக்கும் ஆதரவு மிகவும் முக்கியமானது**



# வாக்களிப்பீர் பலூன் சின்னத்தில்

என்னை பற்றி மேலும்
தெரிந்துகொள்ள.
www.sivaneswaran.in
அல்லது இந்த QR code ஐ scan
செய்து பார்த்து கொள்ளலாம்

மேலும் அறிய
PLEASE SCAN QR CODE TO CONNECT
www.sivaneswaran.in

<u>என்னை சமூக வலைத்தளத்தில் பின்தொடர</u>

FACEBOOK - PAGE
https://www.facebook.com/sivaneswaran.j/
PLEASE SCAN QR CODE TO CONNECT

INSTAGRAM PROFILE
https://www.instagram.com/j_sivaneswaran/
PLEASE SCAN QR CODE TO CONNECT

LIMAT (NGO) டிரஸ்ட் மூலம்
கடந்த சில வருடங்கள்
நலத்திட்ட செயலை பார்க்க
www.limat.org.in அல்லது
இந்த QR code மூலம்

சமூக சேவை
PLEASE SCAN QR CODE TO SEE SOCIAL ACTIVITIES
www.limat.org.in



ஜெ.சிவனேஸ்வரனுக்கு பலூன்
சின்னத்தில் வாக்களியுங்கள்

# ஜெ.சிவனேஸ்வரன்

**B.E, M.Tech (NIT Calicut), MBA (IIM Kozhikode)**

உங்கள் பொன்னான வாக்குகளை
வரிசை **<u>என்-18</u>** இல் உள்ள பலூன் சின்னம் - ,
**<u>2-வது</u>** வாக்கு மெஷினில் **<u>2-வது</u>** பட்டன் ஆன
பலூன் சின்னத்தில் வாக்கு அளிக்க மறவாதீர்

நோட்டாவிற்கு வாக்களித்து உங்கள் வாக்கை வீணாக்காதீர்கள்.
https://affidavit.eci.gov.in/ இல் உள்ள மற்ற வேட்பாளர் சுயவிவரத்திற்குச்
சென்று உங்களுக்கு சரி என்பவருக்கு வாக்கு அளிப்பீர்.
100% வாக்கு அளிப்போம். புது மாற்றத்தை உருவாக்குவோம்